# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8082846

1. District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 12/2023 | Date: நாள் 27/12/2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended by PC (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018.

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 19/12/2023 at 11.00 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 21/12/2023 at 11.30 hrs

23/12/2023 at 14.45 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27/12/2023 | Time : நேரம் 08.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27/12/2023 | Time : நேரம் 08.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 45 கி.மீ. மேற்கே.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி — கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், போத்தம்பட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. முத்துப்பேயத்தேவர் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மாயாண்டித்தேவர் (Late)

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1958 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 2-2-13A, பஜார் தெரு, அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி. ரம்யா, கிராம நிர்வாக அலுவலர், போத்தம்பட்டி, உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

M.முத்துப் பேய்த்தேவர் 27-12-23

[signature] 27/12/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

27/12/2023 at 09.35 hrs

Name: பெயர் அ. அப்பு[illegible]
Rank: நிலை [illegible]......No. எண் ..........
[illegible]

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 27.12.2023-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த (லேட்) மாயாண்டித் தேவர் மகன் திரு.முத்துப்பேயத்தேவர் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் M.முத்துப்பேயத்தேவர், வயது 65, த/பெ மாயாண்டித் தேவர் (லேட்), 2-2-13 A, பஜார் தெரு, அய்யம்பாளையம், ஆத்தூர் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் கடந்த 35 ஆண்டுகளாக திண்டுக்கல் மாவட்டம் அய்யம்பாளையத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்குச் சொந்த ஊர் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா போத்தம்பட்டி அருகில் உள்ள மாடக்காசம்பட்டி கிராமம் ஆகும். போத்தம்பட்டி சர்வே எண் 180-ல் எனது தகப்பனாருக்குச் சொந்தமான புஞ்சை நிலத்தை நானும் என்னுடன் பிறந்த 3 பேரும் சேர்ந்து கடந்த 02.05.2022-ம் தேதியன்று பாகவஸ்தி செய்து உசிலம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண் 1841/2022-ன் கீழ் பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்தோம். அதில் எனது பெயரில் சர்வே எண் 180 / 6Q-ல் 2 செண்ட் இடமும், 180 / 8A-ல் 32 ½ செண்ட் இடமும் பட்டா எண் 1147-ன் கீழ் தாக்கலாகி உள்ளது. எனது பெயரில் உள்ள மேற்குறிப்பிட்ட இரண்டு இடத்தையும் எனது மகன் காசிமாயன் பெயரில் தான செட்டில்மெண்டு மூலம் கடந்த 19.10.2023-ம் தேதியன்று உசிலம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண் 4505/2023 மூலம் பத்திரம் பதிவு செய்து கொடுத்தேன். அப்போது எனது பெயரில் உள்ள இடத்தை எனது மகன் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய படிவத்தையும் சேர்த்து கொடுத்து விட்டோம். அதன் பேரில், பத்திரம் பதிவு செய்த ஒரு வாரம் கழித்து போத்தம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. ரம்யா என்பவர் 80154 12235 என்ற செல்போனில் இருந்து எனது செல்போன் எண் 95243 10822-ல் தொடர்பு கொண்டு உங்கள் மகன் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யுமாறு பத்திரப் பதிவு அலுவலகத்தில் இருந்து சர்வேயர் மூலம் தகவல் வந்துள்ளது, எனவே, நேரில் வந்து மற்ற விவரங்களைக் கேட்டுக் கொள்ளுமாறு கூறினார். எனக்கு அய்யம்பாளையத்தில் தொடர்ந்து விவசாய வேலை இருந்த காரணத்தால் உடனே போக முடியவில்லை. வேலைகள் முடிந்த பின்னர், கடந்த 19.12.2023-ம் தேதியன்று காலை சுமார் 11 மணிக்கு நான் போத்தம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்துக்குச் சென்று அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் திருமதி. ரம்யா என்பவரை நேரில் சந்தித்து விவரம் கேட்டேன். அப்போது அவர் என்னிடம் உங்கள் பெயரில் உள்ள சர்வே எண் 180 / 6Q-ல் 2 செண்ட் இடத்தை உங்கள் மகன் காசிமாயன் பெயரில் முழு புலமாக பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கும், 180 / 8A-ல் 32 ½ செண்ட் இடத்தை சர்வேயர் மூலம் உட்பிரிவு செய்து பட்டா பெயர்

மாற்றம் செய்வதற்கும் மொத்தம் ரூ.9,000/- செலவாகும். நீங்கள் பணத்தை என்னிடம் கொடுங்கள், நானே இடத்தை அளக்க ஏற்பாடு செய்து, இரண்டு இடங்களுக்கும் பட்டா வழங்கவும் ஏற்பாடு செய்து விடுவேன் என்று அப்போது கூறினார். நான் அவரிடம் நீங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளதே, அவ்வளவு செலவாகுமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் உங்களுக்கு இடம் அதிகமாக இருப்பதால் 9,000 ரூபாய் கொடுத்தால் தான் வேலை முடியும், இல்லையென்றால் அப்படியேதான் இருக்கும், நீங்கள் அலைய வேண்டியதுதான் என்றும், இரண்டு நாட்கள் கழித்து வந்தால் இடத்தை நேரில் பார்த்து அளந்து விடலாம் என்றும் கூறினார். எனவே, நான் இரண்டு நாட்கள் கழித்து கடந்த 21.12.2023-ம் தேதியன்று காலை சுமார் 11.30 மணியளவில் மீண்டும் போத்தம்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்துக்கு நேரில் சென்று திருமதி. ரம்யா அவர்களைச் சந்தித்த போது நான் கேட்ட பணம் ரூ.9,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் உடனே பணம் ஏற்பாடு செய்வது சிரமமாக உள்ளது என்று கூறினேன். அவர் என்னிடம் நீங்கள் இன்னும் இரண்டு நாட்கள் கழித்துக் கூட பணத்துடன் பத்திரத்தையும் கொண்டு வாருங்கள், அப்போதுதான் வேலை முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். எனவே, நான் கடந்த 23.12.2023-ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் மீண்டும் போத்தம்பட்டி சென்று கிராம நிர்வாக அலுவலகத்துக்குச் சென்ற போது திருமதி. ரம்யா எங்கள் ஊரிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள குருவலாம்பட்டு கிராமத்துக்கு இடத்தை அளக்கச் சென்றிருப்பதாக அருகில் இருந்தவர்கள் கூறினார்கள். எனவே, நான் எனது செல்போனில் இருந்து கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டு பேசிய போது அவர் என்னிடம், உங்கள் ஊருக்கு பக்கத்தில்தான் சர்வேயர் இடத்தை அளக்க வந்துள்ளார், நீங்கள் உங்கள் இடத்தில் இருங்கள், சர்வேயர் இடத்தை பார்க்க வருவார் என்று கூறினார். அதன்படி மதியம் சுமார் 02.45 மணிக்கு திருமதி. ரம்யா எனது செல்போனில் தொடர்பு கொண்டு இன்னும் சிறிது நேரத்தில் சர்வேயரும், எனது உதவியாளரும் உங்கள் இடத்துக்கு வருவார்கள். எனது உதவியாளரிடம் நான் கேட்ட பணம் ரூ.9,000/-ஐயும், உங்கள் இடத்தின் பத்திர நகலையும் கொடுத்து விடுங்கள் என்று கூறி போனை கட் செய்து விட்டார். அதேபோல் மதியம் சுமார் 03.00 மணிக்கு சர்வேயர் திரு.விக்னேஷ் என்பவர் எனது இடத்திற்கு நேரில் வந்து இடத்தைப் பார்வையிட்டார். அப்போது அவருடன் சுமார் 35 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரும் வந்தார். அவர் என்னிடம், தான் கிராம நிர்வாக அலுவலருக்கு உதவியாக இருப்பதாகவும், உங்களை மேடம் போனில் பேசச் சொன்னார்கள் என்று சொல்லி, அவரது போனில் இருந்து கிராம நிர்வாக அலுவலரைத் தொடர்பு கொண்டு பேசி விட்டு போனை என்னிடம் கொடுத்தார். நான் திருமதி. ரம்யா அவர்களிடம் அதே போனில் பேசிய போது அவர் எனது உதவியாளரிடம் ரூ.9,000/- கொடுத்து விட்டீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் பணம் கொண்டு வரவில்லை, பத்திரத்தின் நகல் கொண்டு வந்துள்ளேன் என்று சொன்னவுடன், அவர் என்னிடம், பத்திரத்தின் நகலை அவரிடம் கொடுத்து விடுங்கள், நான் வாங்கிக் கொள்கிறேன்,

ஆனால் நீங்கள் பணம் கொடுக்காமல் பட்டா கிடைக்காது, வீணாக அலைந்து கொண்டே இருக்க வேண்டியதுதான் என்று கண்டிப்பாகச் சொல்லி போனை வைத்து விட்டார். எனவே, நான் எனது இடத்தின் பத்திர நகலை அந்த இளைஞரிடம் கொடுத்து விட்டு வீட்டுக்கு வந்து விட்டேன். ஏற்கனவே, எனக்கு இருதய பிரச்சனை ஏற்பட்டு பேஸ் மேக்கர் கருவி பொருத்தப்பட்டுள்ளதால் என்னால் அடிக்கடி அலைய முடியவில்லை. விவசாயத்திலும் சரியான வருமானம் இல்லை. எனது மகனும் வெளியூரில் சென்று வேலை பார்த்து குடும்பம் நடத்துகிறான். இந்நிலையில், திருமதி. ரம்யா அவர்கள் என்னிடம் லஞ்சம் கேட்பது மனதுக்கு வேதனையாக உள்ளது. எனவே, சட்டப்படி இலவசமாக எனது மகன் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யவும், உட்பிரிவுக்கு பரிந்துரை செய்து பட்டா கிடைக்க ஏற்பாடு செய்யவும் என்னிடம் ரூ.9,000/- லஞ்சம் கேட்கும் போத்தம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி. ரம்யா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் எனது இடத்தின் பத்திர நகல்களை இணைத்துள்ளேன். திருமதி. ரம்யா அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.9,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள, XXXXXX (முத்துப்பேயத்தேவர்) 27.12.2023.

Sir, Received the typed complaint on 27.12.2023 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 12 / 2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.45 hrs and took up investigation. Sd./-XXXX (A.Ambrose Jayaraja) 27.12.2023, Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. M.Muthupeyathevar, S/o Mayandi Thevar (late), 2-2-13 A, Bazar Street, Ayyampalayam, Athur Taluk, Dindigul District along with xerox copies of Document Nos. 1841 / 2022, dated 02.05.2022 and 4505 / 2023, dated 19.10.2023 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

27/12/23

(A.Ambrose Jayaraja)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.